1990 மார்ச் 29]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மட்டும் 129 குடியிருப்புப் பகுதிகள் இருக்கின்றன. அவற்றில் 48,904 குடியிருப்புகள் இருக்கின்றன. அவற்றில் 121 குடியிருப்புப் பகுதிகள் பழுதடைந்திருப்பதாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அத்தனை பகுதிகளிலும் இரண்டு கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்க்கின்ற பணி தற்போது நடைபெறுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் – விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் திரும்பாதது குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தின் அருகில் இருக்கக் கூடிய ஏறத்தாழ 10,000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் தினசரி கடலுக்கு போய் மீன் பிடித்து வந்து வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்தவர்கள், அந்த முறையில் நேற்று இரவு 28-ஆம் தேதி இரவு கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில், 65 படகுகளிலே சென்ற அந்த மீனவர்களும், 65 படகுகளும் திரும்ப இன்று காலையிலே நாகைத் துறைமுகத்திற்கு வந்திருக்க வேண்டியது வரவில்லை. அதற்குப் பிறகு வந்த மற்றவர்களை விசாரித்ததில் அந்த 65 படகுகளையும், அதில் இருந்தவர்களையும் கடத்திச் சென்று இருப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கடத்திச் செல்லப்பட்டது இலங்கைக் கடற்படையினால் இருக்குமோ என்று சந்தேகிக்கப்படுகிறது. அதனுடைய விளைவாக நாகையைச் சுற்றி இருக்கக் கூடிய பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் மத்தியில் மிகப் பெரிய ஒரு கவலையும், பதட்டமான நிலையும் நாகப்பட்டினத்தில் நிலவுகிறது என்ற செய்தி காலையில் அங்கிருந்து எனக்குத் தொலைபேசி மூலமாக கூறப்பட்டது. அப்படி அந்த 65 படகுகளும், அதில் இருந்தவர்களும் என்ன ஆனார்கள், எங்கிருக்கிறார்கள் என்ற விவரங்கள் தெரியாததனால் மிகப் பெரிய பதட்ட நிலை உருவாகியிருக்கிறது.

மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்து, மீனவர்களையும், படகுகளையும் மீட்டு வந்து, அந்தக் குடும்பங்களுக்கு ஒரு நிம்மதி அளிக்கக் கூடிய முயற்சியை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கோரி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

10.35 மணி

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே 8 3/4 மணி அளவுக்குத்தான் இந்தச் செய்தியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். உடனடியாக நாகைக்கு தொடர்பு கொள்ளப்பட்டது. மீன்வளத் துறை துணை இயக்குநரோடு தொடர்பு கொள்ளப்பட்டது. கிடைத்துள்ள தகவல் நாகைக்குப் பக்கத்திலே உள்ள அக்கரைப் பேட்டை, தித்தாங்குப்பம் ஆகிய பகுதிகளிலிருந்து 27 ஆம் தேதி மாலை மீன் பிடிப்பதற்காக 61 படகுகள் சென்றதில் இன்று காலையில் 8 படகுகள் மாத்திரமே திரும்பியுள்ளன என்றும், மற்ற படகுகள் சென்ற இடம் தெரியவில்லை என்றும் இவைகளை யாராவது கடத்திக் கொண்டு போய் இருக்கலாம் என்றும் மீனவர்கள் சந்தேகப்படுகிறார்கள் என்ற தகவலை மீன் வளத் துறை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

நாகை காவல் துறை கண்காணிப்பாளரோடு தொடர்பு கொள்ளப்பட்டபோது நாகை மற்றும் பக்கத்து கிராமங்களிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 65 படகுகள் மீண்டும் திரும்பி வரவில்லை என்றும் நேற்று இரவு அடையாளம் தெரியாத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட படகுகளில் சில நபர்கள் வந்ததாகவும், அவர்கள் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களைக் கடத்திக் கொண்டு போய் விட்டதாகவும், திரும்பி வந்து சேர்ந்த சில மீனவர்கள் இது போல் தகவல் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது என்றும் அந்த கிராமங்களைச் சேர்ந்த கிராமத் தலைவர்கள் காவல் துறை கண்காணிப்பாளரிடம் இன்று காலையில் வந்து புகார் கூறியுள்ளார்கள். காவல் துறை கண்காணிப்பாளர் உடனடியாக, நம்முடைய மீனவர்களை கடத்திக்கொண்டு போனதாகக் கூறியவர்களை நேரில் அழைத்து வந்து விசாரிப்பதற்காக ஆட்களை அனுப்பி இருப்பதாகவும் நான் தொடர்பு கொண்ட போது பதில் அளித்து இருக்கிறார். நேரிலே கண்டதாக தகவல் சொன்னவர்கள், காவல் துறை கண்காணிப்பாளருடைய அழைப்புக்குப் பிறகு நேரிலே வந்து சொன்ன பிறகு தான் இது குறித்து மேலும் விவரங்களை நாம் அறிவிக்க முடியும். உண்மை நிலை தெரிந்தவுடன் உடனடியாக மீண்டும் தகவல் தெரிவிப்பதாக நாகையிலிருந்து செய்தி வந்துள்ளது. அரசு இது குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகிறது.